# THE ROLE OF SMALL AND MEDIUM ENTERPRISES IN REGIONAL DEVELOPMENT: SPECIAL REFERENCE TO JAFFNA DIVISIONAL SECRETARIAT

**Sakitha Piratheesan**
*Faculty of Graduate Studies, University of Jaffna*
*tsakitha@gmail.com*

## ABSTRACT

Small and medium enterprises (SMEs) constitute an important part in economic development of any country and contribute considerably to regional development by creating new job opportunities, providing investment opportunities and forming the economic capital and potential required for sustainable economic growth. It is observed that whether developed country or developing country, SMEs are the back born of economic development. These enterprises are playing a major role in decrease of poverty, and unemployment. This study aims to evaluate the role of SMEs in regional development with in the area of Jaffna Divisional Secretariat. For this purpose 200 SMEs are selected for this study. SME development projects can play in serving the economic and social development process in such a way of developing and increasing the volume of exports, contribution to regional development, incubator of new skills and innovations, assisting social and political stability, provide support services for large industries. Improvement of Small and medium enterprises increasing living standard of Labour force in this sector. Data were analyzed through SPSS Software using correlation and regression analysis. The result shows that there is strong positively relationship between the role of SMEs and regional development within the study area. The regression analysis also appears with the $R^2$ value of 0.627 which explain that the role of SMEs impact 62% on the regional development of the study area.

**Keywords**: Small and Medium Enterprises, Economic Development, Regional Development, Jaffna Divisional Secretariat

## ஆய்வின் அறிமுகம்

இலங்கையைப் பொறுத்தவரையில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகளானவை பொருளாதார ரீதியான அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது. உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் பரிணாம வளர்ச்சியானது உலகளவில் கைத்தொழில் நடவடிக்கைகளில் துரித வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பொதுவாகக் கூறின் கைத்தொழில் துறையின் வளர்ச்சியானது பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவதுடன் நேரடியாக பல வேலை வாய்ப்புக்களையும் உருவாக்குகின்றது. கைத்தொழில் துறையின் வளர்ச்சியானது இலாபத்தை உச்சப்படுத்தல், செலவினை இழிவுபடுத்தல் போன்றவற்றை இலக்காகக் கொண்டது. இலங்கையினைப் பொறுத்து சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் ஆனவை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக உள்ளதுடன், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் சார்ந்து 75% ஆன பொருளாதார நடவடிக்கைகள ஆனவை காணப்படுவதுடன்இ 45% ஆன வேலைவாய்ப்புக்களினை உருவாக்குவதிலும் இத்துறையானது முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் 50% ஆன பங்களிப்பினை வழங்குகின்றது. (Samarasinghe .– 2018) பொருளாதார ரீதியாக ஏற்படுகின்ற வறுமை, வேலையின்மை, வருமான சமமின்மை போன்றவற்றை நீக்கி உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை ஏற்படுத்துவதில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் ஆனவை பெரும் பங்களிப்பினை வழங்குகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினை உள்ளடக்கிய பகுதியில் இன்றைய நவீன பொருளாதார நடவடிக்கைகளில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் குறிப்பிடக்கூடிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் எத்தகைய பங்களிப்பை வழங்குகின்றது என்பதனையும் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் இவை எவ்வாறான முன்னேற்றத்தை எடுத்து வருகின்றது என்பதனையும்இ சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கையில் எதிர்நோக்கும் சவால்கள் அல்லது பிரச்சனைகள் என்பவற்றை ஆய்வ செய்வதாக இவ் ஆய்வானது அமைகின்றது.

பொதுவாக தொழிலில் ஈடுபடும் ஊழியர்களின் எண்ணிக்கை, ஈடுபடுத்தப்படும் மூலதனத்தின் அளவு, சொத்துக்களின் பெறுமதி, தொழிலின் தன்மை என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர

தொழில் முயற்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையினிலே கைத்தொழில் அபிவிருத்திச் சபையானது சிறிய கைத்தொழில் என்பது 4மில்லியனுக்கு மேற்படாத மூலதனத்தினையும் (Us$42,000) 50க்கும் உட்பட்ட தொழிலாளர்களையும் கொண்டது சிறு கைத்தொழில் நடவடிக்கை எனவும்இ 8மில்லியனுக்கு மேற்படாத மூலதனத்தினையும் ((Us84,000) 50 –99 வரையான தொழிலாளர்களையும் கொண்டது நடுத்தரக்கைத்தொழில் நடவடிக்கை எனவும் வகைப்படுத்தியுள்ளது. மூலதன வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகள், தொடர்பாடல் வசதி, தொழிலாளர்களின் தொழில் திறன் போன்றன சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாகும்.

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தினை உள்ளடக்கிய பிரதேசங்களின் பொருளாதார நடவடிக்கைகள் ஆனவை, விவசாயம் சார்ந்தவைஇ கடல் வளம் சார்ந்இ சிறிய மற்றும் நடுத்தர தொழில் நடவடிக்கைகள் சார்ந்தவை என்ற வகையில் அமைந்து காணப்படுகின்றது. இப்பிரதேசத்தின் நிலப்பரப்பானது 11.31 சதுர Km ஆகவும் சனத்தொகையானது 2016ல் 59,498 இல் இருந்து 2018ல் 72,345 ஆகவும் அதிகரித்துள்ளது. 28 கிராம அலுவலக பிரிவினையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. (யாழ்ப்பாண பிரதேச செயலக மூலவளத்திரட்டு – 2018) இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் கடல்வளத்துடன் சார்ந்த கடலுணவுகளின் சிறிய கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவோராக உள்ளதுடன் வெதுப்பகம் சார்ந்த உற்பத்திகள் ̇பால் உணவு சார்ந்த உற்பத்திகள்இ மென்பான தயாரிப்பு போன்ற பல கைத்தொழில் நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது. சிறிய, நடுத்தர, பாரிய மற்றும் சுய தொழில் நடவடிக்கைகள் என்ற அடிப்படையில் நோக்கின் இங்குள்ள 2018 கைத்தொழில்கள்சாலைகளும் தொழிலாளர்களின் எண்ணிக்கையானது 4941ஆகவும் காணப்படுகின்றது. (யாழ்ப்பாண பிரதேச செயலக மூலவளத்திரட்டு – 2018)

### ஆய்வுப் பிரச்சனை

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் ஆனவை வளர்ச்சியோடு இணைந்த அபிவிருத்தியினை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கினை வகிப்பதோடு, குறிப்பாக கிராமமட்ட அபிவிருத்தியினை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. அவ்வகையினிலே சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகள் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளதா? சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் பிரதேச அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்துகின்றதா? மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நடவடிக்கைகளில் ஏற்படும் தடைகள் ∴ பிரச்சனைகள் என்பவற்றை ஆராய்வதாக இவ் ஆய்வானது அமைகின்றது.

### ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள் பற்றிய மீள்பார்வை

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கையின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொண்ட ஆய்வில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகளில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளதோடு இலங்கையின் பொருளாதாரத்தில் பெறும் முக்கியத்துவமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. மூலதனத்தில் ஏற்படும் பற்றாக்குறை, பலவீனமான நிறுவனக்கட்டமைப்பு, ஆதரவுகள் இன்மை, குறைந்த உற்பத்தி, குறைந்த தரம் போன்றன பிரச்சினைகளாகவும் இதனை தீர்க்க கொள்கை வகுப்பாளர்கள் சிறந்தமுறையில் கொள்கைத் திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் நிறுவன ரீதியான ஆதரவுகள் அரசதுறை, தனியார்துறை என்ற ரீதியாக வலுப்படுத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (Aruna 2003)

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகளானவை யுத்தத்தின் பின்னர் குறைந்த மட்ட வளர்ச்சியையே பதிவு செய்துள்ளன. யுத்தத்துக்கு பிற்பட்ட காலப்பகுதியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் எதிரிநோக்கும் பிரச்சனைகள் ஆராயப்பட்டுள்ளதுடன் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இத்துறைகள் சார்ந்த வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றது எனவும் குறிப்பிடுகின்றார். (Vijayakumar 2013)

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகள் கிராமமட்டத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை ஆராய்ந்துள்ளதுடன் இதற்காக ‘எம்பிலிப்பிட்டியா’’ பிரதேச செயலர் பிரிவில் 60 முயற்சியாளர்களை எழுமாறான முறையில் தெரிவு செய்துள்ளதுடன் போதிய தகவல்கள் இன்மை இபதிவுகள் தொடர்பாக உருவாகும் பிரச்சனைகள், கைத்தொழில்களை சரியான முறையில் முகாமை செய்யாமை, நிதி வசதிகளில் ஏற்படும் பற்றாக்குறை, தொழினுட்ப அறிவில் ஏற்படும் பற்றாக்குறை, தொழிலாளர்களிடம் உருவாகும் பிரச்சனைகள் போன்றன சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கையில் ஏற்படும் பிரச்சனைகளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளதுடன் இதற்கான தீர்வுகளாக உட்கட்டமைப்பு வசதிகளில் விரிவாக்கத்தினை ஏற்படுத்தல், நிறுவன ரீதியான ஒத்துழைப்புக்களினை மேம்படுத்தல், தொழிலாளர்களிடம் தொழினுட்ப அறிவினை மேம்படுத்தல், ஊழியச் செறிவான கைத்தொழில் முறைமைகளை உருவாக்குதல் போன்றன முன்வைக்கப்பட்டுள்ளன. (Samarasingha 2018)

சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் முக்கியத்துவத்தினை நோக்கமாகக் கொண்ட இவரது ஆய்வானது “ஸ்லோவாக்கியா’’ எனும் நாட்டில் மேற்கொள்ளப்பட்டதாகும். இந்நாட்டினைப் பொறுத்து கைத்தொழில் நடவடிக்கைகளில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத் தொழில்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. எனக் குறிப்பிட்டுள்ளதோடு சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் வரி முகாமைத்துவம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பும் தனது பரிந்துரைகளை முன்வைக்கின்றார். (viera Bestivinova 2012)

சிறிய நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்களின் எதிர்காலம் தொடர்பான அபிவிருத்தித திட்டங்கள், உற்பத்திச்செயற்பாடுகள். சந்தைப்படுத்தல், நிதிச்சந்தை செயற்பாடுகள் என்பன தொடர்பான வரையறைகள்,

சிறிய நடுத்தர தொழில் , முயற்சி நிறுவனங்கள் தம்மை மேலும் வளர்ச்சி அடையச் செய்ய மிக மிக முக்கியமானவை என்பதனை ஆய்வு ரீதியாக தெரிவுத்துள்ளார். (Priyan N 2006)

## ஆய்வின் நோக்கம்

**பிரதான நோக்கம்**
சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்படும் முன்னேற்றத்தை கண்டறிதல்.

**சிறப்பான நோக்கம்**

- சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கையில் உள்ள சவால்கள்∴ பிரச்சனைகளை இனங்காணுதல்.
- சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகள் பிரதேச அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்துகின்றதா? என்பதனை கண்டறிதல்.

## ஆய்வின் கருதுகோள்

H1: சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் பிரதேச அபிவிருத்திக்கு இடையே நேரான தொடர்பு காணப்படுகின்றது.

H2: சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களில் ஏற்படும் முன்னேற்றமானது தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றது.

## ஆய்வு முறையியல்

முதல் நிலைத்தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் போன்ற மூலங்களில் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவு மூலங்களாக வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள் என்பன ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளன. வினாக்கொத்துக்கள் வாயிலான தரவுகள் நம்பகத்தன்மை வாய்ந்ததாகக் காணப்படுவதுடன் ஆய்வாளரினால் களத்திற்கு நேரடியாகச் சென்று திரட்டப்பட்ட தரவுகளாகவும் உள்ளன. நேர்காணல்களும் முக்கியம் பெறுகின்றன. இரண்டாம் நிலைத்தரவுகள் எனும் போது பிரதேச செயலக புள்ளி விபர அறிக்கைகள்இ சஞ்சிகைகளஇ ஆய்வுக்கட்டுரைகள், புத்தகங்கள் என்பன அமைந்து காணப்படுகின்றன.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவில் 2108 சிறிய மற்றும் நடுத்தர, பாரிய அளவின் கைத்தொழில் நடவடிக்கைகளில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் சார்ந்து அதிகளவான தொழிலாளிகளை உள்ளடக்கிய பகுதிகளில் இருந்து 200 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கி தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.இவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் ஸ்ரீஸுஸு மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் முடிவுகளும் பெறப்பட்டுள்ளன.

## தரவுப்பகுப்பாய்வும் முடிவுகளும்

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்கள் தொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத் தரத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது.என்ற கருதுகோளினை நோக்கின் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சாரா மாறிகளான சம்பளத்தின் அளவு, அரச உதவிகள், சேமிப்பின் அளவு பிரதேச அபிவிருத்தி, ஏனைய கைத்தொழில் நடவடிக்கைகள் என்பன சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் நேர்கணியத்தில் செல்வாக்கு செலுத்துகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .792[a] | .627 | .623 | 8.719 |

அட்டவணையின் படி நோக்கின் $R_2$ ஆனது 0.628 ஆக காணப்படுகின்றது. இதன் கருத்து என்னவெனில் மேற்கூறப்பட்ட மாறிகளை உள்ளடக்கிய சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகள் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் நேர்க்கணிய அதிகரிப்பை ஏற்படுத்து கின்றது. இதன்படி மேற்குறித்த காரணிகளில் ஏற்படும் அதிகரிப்பானது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்திலும் அதிகரிப்பை ஏற்படுத்தும்.

$Ls = 6.7213 + 0.152x_1 + 0.214x_2 + 0.187x_3 + 0.6131x4$

சமன்பாட்டின் அடிப்படையில் நோக்கின் இங்கு $X_1$ என்பது அரச உதவிகளையும் $X_2$ என்பது சேமிப்பின் அளவினையும் $X_3$ என்பது சம்பளத்தினையும் $X_4$ என்புது பிரதேச அபிவிருத்தியினையும் குறிக்கின்றது. அரச உதவிகளில் ஏற்படும் அதிகரிப்பானது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் 15% மாற்றத்தினை அதிகரிப்பினை ஏற்படுத்தும் இதே போல பிரதேச அபிவிருத்தியில் ஏற்படும் 1% மாற்றமானது தொழிலாளர்களின்

வாழ்க்கைத தரத்தில் 61% ஆன மாற்றத்தினை ஏற்படுத்தும் சேமிப்பின் அளவில் ஏற்படும் 1% ஆன மாற்ற மானது 21% ஆன அதிகரிப்பை ஏற்படுத்தும் இதே போல தொழிலாளர்களின் சம்பளத்தில் ஏற்படும் 1% ஆன அதிகரிப்பானது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் 18% ஆன அதிகரிப்பை ஏற்படுத்தும். எனவே சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலில் ஏற்படும் முன்னேற்றமானது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில்

முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.

.

**Model Summary**

| Model | R | R Square | Adjusted R Square | Std. Error of the Estimate |
|---|---|---|---|---|
| 1 | .843[a] | .711 | .689 | 59.79167 |

a. Predictors: (Constant), REDI

## Ls-Living Standard

இதேபோல தொழில் முயற்சியாளர்களிடையே வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் வாயிலாக திரட்டிக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நோக்கின சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும், தொழிலாளர்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்துக்கும் இடையிலான இணைபு வீதம் 74% ஆக உள்ளது. இவ் இணைபானது இவ்விரு மாறிகளுக்கும் இடையே பலமான தொடர்பு காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. இதிலிருந்து பெறக்கூடிய முடிவு யாதெனில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக் கைகளில் ஏற்படும் முன்னேற்றமானது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்றது என்ற முடிவுக்கு வரமுடியும்.

**Correlations**

| | | SME | Living standard |
|---|---|---|---|
| SME | Pearson Correlation | 1 | .747** |
| | Sig. (2-tailed) | | .001 |
| | N | 15 | 15 |
| LS | Pearson Correlation | .747** | 1 |
| | Sig. (2-tailed) | .001 | |
| | N | 15 | 15 |

**. Correlation is significant at the 0.01 level (2-tailed).

**Correlations**

| | | SMEI | REDE |
|---|---|---|---|
| SMEI | Pearson Correlation | 1 | .895** |
| | Sig. (2-tailed) | | .000 |
| | N | 15 | 15 |
| REDE | Pearson Correlation | .895** | 1 |
| | Sig. (2-tailed) | .000 | |
| | N | 15 | 15 |

**. Correlation is significant at the 0.01 level (2-tailed).

அடுத்து பிரதேச அபிவிருத்திக்கும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் இடையே நேரான தொடர்பு காணப்படுகின்றது. இங்கு சார்ந்த மாறியாக (Depentent Variable) சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகளும் சாராத மாறியாக பிரதேச அபிவிருத்தியும் காணப்படுகின்றது

இங்கு SMEI என்பது சிறிய மற்றும் நடுத்தர தொழில் நடவடிக்கைகளினயும் REDE என்பது பிரதேச அபிவிருத்தியினையும் குறிக்கின்றது. இவ்விரு மாறிகளுக்கும் இடையே இணைபானது 89% ஆகக் காணப்படுகின்றது. இவ் நேர் இணைபானது இவ்விரு மாறிகளுக்கும் இடையே உறுதியான நேர் தொடர்பு உள்ளமையினை எடுத்துக்காட்டுகின்றது.

அடுத்து சார் மாறி, சாரா மாறியானதும் இடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுவதற்கு பிற்செலவு மாதிரியினை பயன்படுத்த முடியும். இங்கு $R_2$ ஆனது 71.1% ஆக காணப்படுகின்றது. அதாவது பிரதேச அபிவிருத்தியில் 71% ஆன தாக்கத்தை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் நடவடிக்கைகள் ஏற்படுத்துகின்றன.

மிகுதி 29% ஆன அளவு ஏனைய காரணிகள் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை அவதானிக்க முடிகின்றது

அடுத்து சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் சார்பில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் என்ற சார்பில் நோக்குகின்ற போது. கழிவுகளை சரியான முறையில் அகற்றுவதற்கான வசதிகள் இன்மை, தொழினுட்ப ரீதியான வசதிகள் குறைவு, ஊழியர்கள் சார்ந்த பிரச்சனைகள்இ நிதிப்பற்றாக்குறைஇ சரியான தகவல்கள் வழங்கும் நிறுவன ரீதியான செயற்பாடுகள் குறைவு தொழில் பதிவுகளை மேற்கொள்வதில் உள்ள பிரச்சனைகள் போன்றவற்றை குறிப்பிடலாம் மேலும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் இன்மை அதாவது போக்குவரத்து சார்ந்த பிரச்சனைகள் முக்கிய பிரச்சனைகளாக உள்ளது.

**முடிவுரையும் விதந்துரைகளும்**

சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகள் ஆனவை, பிரதேச அபிவிருத்தியில் நேர்க்கணிய தாக்கத்தினை ஏற்படுத்துவது மட்டுமல்ல தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்திலும் முன்னேற்றத்தினை ஏற்படுத்துகின்றது என்ற முடிவினை பெற்றுக்கொள்ள முடிகின்றது. மேலும் இத்துறை சார்ந்து ஏற்படுகின்ற பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வதற்கு,

- கொள்கைகளை சிறந்த முறையில் உருவாக்கி உட்கட்டமைப்பு வசதிகளை கைத்தொழில் நடவடிக்கைகள் மேம்பாடு அடையச்செய்தல்.
- நிறுவன ரீதியான ஆதரவுகளினை வலுப்படுத்தி மூலதனம் சார்ந்த வசதிகளை விரிவுபடுத்தல்.
- தொழினுட்ப ரீதியான வசதிகளை தொழில்கள் சார்ந்து கிடைக்கச்செய்து கைத்தொழில் நடவடிக்கைகளில் விரிவாக்கத்தினை ஏற்படுத்தல்.
- தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்து சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகளை முன்னேற்றமடையச் செய்தல்.
- சரியான தொழிநுட்ப வசதிகளை கைத்தொழிலின் ஆரம்பக் கட்ட நிலையில் இருந்து கிடைக்கச்செய்தல்.
- செலவுகளை இயன்றளவு குறைப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தல்.
- பிரதேச ரீதியான வளங்களை சரியான முறையில் பயன்படுத்தல்.
- வரிகள் தொடர்பான சிறப்பான முகாமைத்துவம் சார்ந்த நடவடிக்கைகளளை நடுத்தரக் கைத்தொழில்கள் சார்ந்து உருவாக்குதல்.
- நுண்கடன் வசதிகளை கைத்தொழில்களின் விரிவாக்கத்துக்கு கிடைக்க உதவுதல்.

## Reference

### Book

Aruna (2003) 'Small and medium enter prise development in srilanka. a review As Gamage Meijo University Faculty of Busniess mangement.// ./. publication.

Hatten (2011) Small business Management : Enterpreneuership and Beyond. ()5th edition)South –Western Cengage Learning.

Stokes ,Wilson(2010)Enterpreneurship and small business Managemment (6th edition)Andover.Cengage Learning EMEA.

Viera Bestivinova (2012) 'Finacial and Taz Management and small and medium size Industrial Enterprise, Faculty of Materials Science and technology in tranava.

Vijayakumar (2013) 'The dtaus of small and medium Enterprises and promotions for their Growth in Srilanka. Journal on Global Business Management and reseach. Vol Issue2, 2013.

### Conference Paper

Hewaliyange (2001) 'Export orientation for small and medium Enterprises policies Strategies and programs, country paper, Asian productivity organization Tokyo pp – 233 -246

Samarasingha (2008) 'Problems faced by small and medium scale Enterprises in Rural Areas in Srilanka' 7th International conference of the Srilanka forum of university Economists (SLFUE) pp – 178-183.

### Journal Article

Stuart M.L (2006) 'Regional Development Policy and Small medium enterprise Finacial Performance. www.reseach gate.net/ Publication/ 330512g

Loecher " Small and Mediumsized enterprises: delimitation and European definition in the area of industrial business. European Business Review 12 (5),261-264